(இ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/73)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1973) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

---

* 22—11—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 நவம்பர் 28

இந்திய அரசியலமைப்பின் 47-வது பிரிவில் கண்டுள்ள நெறிமுறைக் கோட்பாட்டினையொட்டி மதுவிலக்கினை இம் மாநிலத்தில் படிப்படியாக மீண்டும் செயலுக்குக் கொண்டுவர இவ்வரசு முடிவு செய்தது. முதற்படியாக, தமிழ்நாட்டில் உள்ள கள்ளுக்கடைகள் அனைத்தும் 1973 செப்டம்பர் 1 ஆம் நாளிலிருந்து மூடப்பட்டு விட்டன. மேற்கண்ட முடிவின் விளைவாக, கள்ளைப் பொறுத்த வரையில் கள் இறக்குதல், விற்பனை செய்தல், போக்கு வரத்து செய்தல், கையகம் வைத்திருத்தல் ஆகியவற்றைத் தடை செய்ய வேண்டி தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 10/1937) மீண்டும் செயலுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாயிற்று. மேற்சொன்ன தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு 10-வது சட்டம், கள் வியாபாரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்க முற்படுவதால், தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) (திருத்தச்) சட்ட வரைவினைச் சட்ட மன்றப் பேரவையில் கொண்டு வருவதற்காக, இந்திய அரசியலமைப்பின் 304 (B) பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் பெற்று அதனைத் தெரிவிக்குமாறு 1973 ஆகஸ்ட் திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. பேரவையின் கடந்த கூட்டத்தின்போது குடியரசுத் தலைவரிடமிருந்து முன் ஒப்புதல் வராததால், அவசரச் சட்டம் ஒன்றை, அதாவது தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1973) சாற்றுரைக்க முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டம் ஒன்றைக் கொண்டுவர இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இதனை இம்மாமன்றம் ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மதுவிலக்கை திரும்பவும் அமலாக்குவதற்காக அரசு முடிவு செய்ததால் இந்த மசோதா இங்கே தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. மதுவிலக்கு நீண்ட நாட்களாக அமலிலிருந்து இடையிலே ரத்து செய்யப்பட்டதன் பயனாக குடிப்பவர்கள்

அதிகமாகி, சமுதாயத்தில் பல சங்கடங்கள் நேர்ந்திருக்கின்றன என்பது நாம் கண்கூடாகப் பார்க்கும் உண்மை. இதைத் திரும்ப அமலாக்கும்பொழுது, சங்கடங்கள் பல இருக்கும் என்பதும் நாம் எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். ஏதோ மதுவிலக்கு ரத்தை ஒழித்துவிட்ட திருப்தியில் மசோதாவை நிறைவேற்றிவிடுவதால் மட்டும் பலன் இல்லை. மதுவிலக்கை நல்லமுறையிலே செயல்படுத்த அரசாங்கம் தகுந்த முயற்சிகளை எடுக்க வேண்டும். இன்றைக்கு கள்ளுக்கடைகளை மட்டும் நாம் நிறுத்தியிருக்கிறோமே தவிர, சாராயம் போன்றவைகளை அடுத்த ஆண்டில் எடுத்துவிட அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதுதான் நடைமுறையில் இருக்கும் உண்மை, மேலும், கள்ளை இறக்க மாட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. இரண்டு மூன்று இடங்களில் தென்னை மரங்களிலிருந்து இன்னும் கலயங்களை எடுக்கவில்லை என்று கேள்விப் படுகிறேன். எனவே இதை எப்படி அமலாக்குவது? அன்றைக்கு அமலில் இருந்த நேரத்திலும் இந்தத் தவறு இருந்தது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றியெல்லாம் நல்லமுறையிலே அமலாக்குவது சிரமம் என்று சொல்லி எடுத்தார்கள். அதை அமலுக்குக் கொண்டு வரும்பொழுது அதைத் தீவிரமாக அமலாக்க முயற்சிக்க வேண்டும்.

எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 1959 ஆம் ஆண்டில் என்று கருதுகிறேன். இந்தக் கருத்து சரியா என்று ஆலோசிக்க வேண்டும். மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் ஒரு மசோதாவைக் கொண்டு வந்த நேரத்தில் எதிர்க்கட்சியிலே இருந்த நாங்களெல்லாம் எதிர்த்து அது நிறைவேற முடியாமல் செய்துவிட்டோம். கிராமங்களிலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் அந்தக் கிராமத்து மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் போலீஸ் நடவடிக்கை எடுக்க முடியும், இல்லையென்றால் போலீசாரால் நடவடிக்கை எடுக்க முடியாது. போலீஸ்காரர்கள் அவர்களோடு சேர்ந்து குடித்துக்கொண்டு இருப்பதை நடைமுறையில் பார்க்கிறோம். பெரிய அதிகாரிகள் தயவு தாட்சண்யமின்றி

நடவடிக்கை எடுக்க முயன்றாலும்கூட, போலீஸ் ஸ்டேஷனில் இருப்பவர்களே போய் இவர்கள் வருகிறார்கள் என்று சொல்லி விடும் அளவிற்கு போலீசின் நிலைமை போய்விட்டது.

மக்களுடைய ஒத்துழைப்பு இல்லை என்று ஒருபக்கம் இருந்தாலும் போலீசிலும் மோசமாகயிருக்கிறது. அப்பொழுது கொண்டுவரப்பட்ட மசோதாவில் கிராம மக்கள் ஒத்துழைக்க வில்லை என்றால் கிராமத்திற்கு கூட்டு அபராதம் விதிப்பது என்ற வகையில் மசோதாவைத் தாக்கல் செய்தார்கள். அப்பொழுது நாங்களெல்லாம், யாரோ காய்ச்சுகிறார்கள் என்பதற்காக ஊரிலே யுள்ள எல்லோருக்குமே எப்படி அபராதம் போடுவது, அதனால் பெரிய எதிர்ப்பு அரசாங்கத்திற்கு வந்துவிடும், சங்கடம் உண்டாகும் என்று பேசினோம். இதனால் அரசாங்கத்தில் இருந்தவர்களும் பயந்துவிட்டார்கள். ஊர்பூராவும் அபராதம் என்றால் எல்லோரும் விரோதமாகப் போய்விடுவார்கள் என்று பயந்துவிட்டார்கள். எனவே, மக்கள் எல்லோரும் சேர்ந்து அமலாக்க வேண்டுமென்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அந்தக் கருத்து சரியானதா என்று பார்க்க வேண்டும்.

ஜனநாயகத்தில், ஆட்சியில் இருப்பவர்கள் நீடித்துப் பல்லாண்டுகள் இருக்க முடியுமா என்பதைச் சொல்ல முடியாது. ஆளுங்கட்சியாக இருப்பவர்கள் எதிர்க்கட்சியாக வரலாம், அதே போல் எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் ஆளுங்கட்சியாக வரலாம். எனவே, ஒரு கொள்கையை எடுத்தால் அதைச் சரியான முறையில் அமலாக்க வேண்டுமென்ற உறுதியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவையொட்டி சில கருத்துக்களைச் சுருக்கமாக நான் கூறலாம் என்று கருதுகிறேன்.

நம்முடைய நிர்மாணச் சட்டத்திலே மதுவிலக்கு ஒரு 'டைரக்டிவ் பிரின்சிபில்' என்று சொல்லப்பட்டு, மாகாண அரசாங்கம்தான் கடைப்பிடிக்க வேண்டும், நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று 'சேப்டர் 4' என்று நினைக்கிறேன், அதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மதுவிலக்கை ரத்து செய்யும் நேரத்திலேகூட இந்த அவையிலே

1973 நவம்பர் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

பல்வேறு தரப்பிலேயிருந்தும் ஒரு கருத்து எழுப்பப்பட்டது. இது நிர்மாணச் சட்டத்திற்கு விரோதமாக வரும் செயல் என்று நான் கூறினேன். அதை இந்த மன்றத்திலே முதலில் தாக்கல் செய்யும் நேரத்திலேயே ஆட்சேபணை தெரிவித்தோம். நிர்மாணச் சட்டத்திலே கூடிய விரைவில் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றிருக்கிறது.

மற்ற மாநிலங்கள் எப்படியிருந்தாலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நீண்ட நாட்களாக மதுவிலக்கு அமலில் இருப்பதால் அதைத் தளர்த்துவது நிர்மாணச் சட்டத்திற்கு விரோதம் என்று சொன்னோம். அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பேச்சைச் சரியாகக் கேட்கவில்லையோ என்னவோ தெரியவில்லை, நாங்கள் சொன்னதைப் புறக்கணித்துவிட்டு மதுவிலக்கை தற்காலிகமாக ரத்து செய்திருக்கிறோம், சஸ்பெண்ட் செய்திருக்கிறோம் என்று சொல்லி விட்டார்கள். அப்பொழுது எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து கூறப்பட்ட கருத்துக்கள் நியாயமான கருத்துக்கள். அந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. மைனாரிட்டியினர்தானே சொல்கிறார்கள், 4 அல்லது 10 பேர்தானே சொல்கிறார்கள், நமக்கு மெஜாரிட்டி இருக்கிறதே என்று நினைக்காமல், சொல்லக்கூடிய கருத்துக்களை யார் சொல்லுகிறார்கள் என்று பார்க்காமல், அவைகள் நியாயமான கருத்துக்களா என்று முதலமைச்சரவர்கள் பார்த்திருந்தால் இம்மாதிரியான குழப்பமான நிலைமை நிச்சயமாக ஏற்பட்டிருக்க முடியாது. அப்படியில்லாததால் மீண்டும் இந்த அவையில் 'சஸ்பென்ஷனை' சஸ்பென்ஷன் செய்யக்கூடிய அளவில், மது விலக்கைக் கொண்டுவரும் அளவில் நிலைமை இருக்கிறது. இதற்கு மூலகாரணம் அன்றைக்குச் செய்த தவறுதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தத் தவறு நடக்காமல் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமே என்று பார்க்க வேண்டும்.

அன்றைக்குச் செய்த முதல் தவறு, எதிர்க்கட்சிகள் சொல்லும் கருத்துக்களை காதில் போட்டுக்கொள்ளாமல் தானாகவே முடிவு செய்து விட்டதுதான். ஆளுங்கட்சியிலே "முரட்டல் மெஜாரிட்டி" இருக்கிறது என்பதால் கொண்டு வந்துவிட்டார்கள், நாங்கள்

எவ்வளவோ கருத்துக்களைச் சொன்னோம். அவைகளைக் கேட்காமல் கொண்டு வந்துவிட்டார்கள். இப்பொழுது அதைப்பற்றி அனுபவிப்பதால் வருத்தப்படுகிறார்கள். அப்படி முதலமைச்சரவர்கள் வருத்தப்படவில்லையென்றால் இந்த மசோதா இன்றைக்கு இங்கே வந்திருக்க முடியாது.

What a pity we have committed a crime.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மதுவிலக்கை ஒத்திவைப்பதை அப்பொழுது உங்களுடைய தலைவரே ஒத்துக்கொண்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்கள் கட்சியிலே என்ன சொல்லியிருக்கிறார்களோ தெரியாது. இந்த அவையிலே சொல்லப்பட்ட கருத்துக்கள், பகிரங்கமாகச் சொல்லப்பட்ட கருத்துக்களுக்குத்தான் நான் பொறுப்பாளி. அவர் இருந்தால் நீங்கள் அந்த விஷயத்தைப்பற்றிக் கேளுங்கள். இந்த மன்றத்திலே அதை ஆதரித்துப் பேசினாரா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய துரதிருஷ்டம் இந்த மன்றத்தில் அவர் பேசவில்லை. நான் கேட்க விரும்புவது, மதுவிலக்கை ஒத்திவைப்பதற்கான வாய்ப்பை உங்களுடைய தலைவர் ஒத்துக்கொண்டு, பத்திரிகையிலெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அந்தக் கட்சியில் கூடியவரையில் வற்புறுத்தியிருக்கிறேன் என்பதுதான் அவர் சொன்ன கருத்து. அதைத்தான் அவருடைய கருத்தாக நாம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்களிடம் அதைத் தளர்த்த வேண்டாமென்று சொன்னோம், கேட்கவில்லை. (குறுக்கீடு) நான் வாக்கியத்தை முடிப்பதற்குள் குறுக்கிட்டால் எப்படி?

You are interrupting me while I am interrupting you.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எவ்வளவு பேர் வழிமறித்தாலும் என்னால் சமாளிக்க முடியும். நான் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தரவேண்டும்.

I will yield the floor, than you san say.

1973 நவம்பர் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், இதை முதலமைச்சரிடத்திலே சொன்னேன், ஆனால் கேட்கவில்லை. அதேநேரத்தில் முதலமைச்சர் சொன்னார், நிதிநிலைமை பயங்கரமாக இருக்கிறது என்று சொன்னதால் இந்த ஆட்சியைப் பாதுகாக்க வேண்டுமென்று வேறு வழியில்லாமல் ஒத்துக்கொண்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில் அதைத்தான் ஆதாரபூர்வமான கருத்தாக ஏற்கவேண்டும்.

(பிற்பகல் 1.30)

அதிலே உங்களுக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். அப்படிச் சொல்லவில்லை என்று நாங்கள் வாதாடலாம். அப்படித்தான் சொல்லியிருக்கிறார் என்று நீங்கள் வாதாடலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆனந்தவிகடன் பத்திரிகையில் 'நான் ஏன் பிறந்தேன்' என்ற கட்டுரையில் தொடர்ந்து எழுதும்போது 'இந்த நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் இதைத் தவிர வேறு வழி இல்லை; ஆகவே ஒத்திவைத்திருக்கிறோம்' என்ற கருத்தை ஒப்புக் கொண்டு எழுதியிருக்கிறார். நாங்கள் எடுத்த முடிவுக்கு ஆதாரங்களைத் தந்து வேறு முடிவு எடுக்க முடியாது! என்று ஆனந்தவிகடன் பத்திரிகையில் கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி ஒன்றரை ஆகிவிட்டது. இந்தச் சட்ட முன்வடிவை விவாதித்து முடித்து விடலாமா அல்லது அவையை ஒத்தி வைத்துவிட்டு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா?

(அவையை ஒத்தி வைத்துவிடலாம் என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவைக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1,32-க்கு ஒத்திவைக்கப்பட்டது.